**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 60/2024**
**வழக்கு சாட்சி PW–9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்த் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்லத்துரை | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | ஊத்துமலை | வயது | : | 26 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 18.02.2026.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஊத்துமலையில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.2 மகேந்திரனை எனக்கு தெரியும். எதிரி முகேஷை எனக்கு தெரியும். 2, 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் சம்பவம் நடந்த மறுநாள் நான் ஊத்துமலையில் வீட்டில் இருந்தபோது, ஊரில் மகேந்திரனை யாரோ வெட்டி விட்டார்கள் என்று சொன்னார்கள். அதன் பின்னர் சில மணிநேரம் கழித்து முகேஷ் வெட்டி விட்டதாக ஊரில் பேசிக்கொண்டார்கள். இந்த வழக்கு சம்பவம் குறித்து வேறு எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 25.02.2023ம் தேதி, மாலை 05.30 மணியளவில் நானும், எங்கள் தெருவைச் சேர்ந்த காளிதாஸ்

என்பவரும் எங்கள் ஊர் ஒயின்ஷாப் பக்கம் நின்று கொண்டிருந்த போது, வெள்ளத்துரை அவரது மாடுகளை ஓரமாக மேய்த்து கொண்டிருந்தபோது, முகேஷ் இருசக்கரவாகனத்தை மாடு மீது மோதி கீழே விழுந்து விட்டார் என்றால் அந் விபரம் பற்றி நான் கேள்விபட்டேன். 04.03.2023 ம் தேதி, மாலை 06.00 மணிக்கு எங்கள் ஊர் சமுதாய சுடுகாட்டு பக்கம் வைத்து எதிரி வெள்ளத்துரையை பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. 10.15 மணிக்கு வெள்ளத்துரை வீட்டு பக்கம் வைத்து எதிரி மகேந்திரனை பார்த்து அசிங்கமாக பேசி, கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அரிவாளை எடுத்து வெட்டி, காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் அந்த சம்பவத்தை நான் மறுநாள் காலையில் கேள்விபட்டேன்.

**<u>மறுவிசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.19 19:15:52 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 60/2024</u>
<u>வழக்கு சாட்சி PW-10</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலாஜி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கோதைநாயகம் | தொழில் | : | கொத்தனார் |
| கிராமம் | : | ஊத்துமலை | வயது | : | 34 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 18.02.2026.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் ஊத்துமலையில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.4 பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு மறவர் காலனியில் வெட்டு சம்பவம் நடந்த வீட்டிற்கு 10 வீடுகள் தள்ளி நான் கொத்தனார் வேலை செய்து கொண்டிருந்தேன். காலை சுமார் 07.00, 07.30 மணியளவில் போலீசார் அங்கு வந்தார்கள். என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டு கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 05.03.2023 ம் தேதி, காலை 03.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு வந்து போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், மதுபாலன் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.19 19:15:58 +0530